**லாபம் பொங்கும் கம்பஞ் சம்பா நெல்!**



சிவபிரகாசம்



வைத்தியநாதசாமி

கம்பஞ் சம்பாவில் சமைச்ச சர்க்கரைப் பொங்கல், எவ்வளவு அருமையா இருக்குனு நீங்களே சாப்பிட்டுப் பாருங்க" என வாசனை கமகமக்க நம்மிடம் கொடுத்தார். விவசாயி சிவப்பிரகாசம். தனித்தனிப் பருக்கையாக இல்லாமல். அதே சமயம் அதிகமாகவும் குழையாமல் சரியான பதத்தோடும், தனிச்சுவையோடும் இருந்த அந்தப் பொங்கல்.. இதுவரை நாம் சாப்பிட்டிராத ருசி.. நெய்யின் வாசனையையே மிஞ்சும், சாதத்தின் வாசனை என்று பிரமாதமாக இருந்தது.

பொங்கலுக்கு ஏற்றதாகவே இருக்கும் கம்பஞ் சம்பா என்றொரு அரிசி ரகத்தை கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுகா, கீழமூங்கிலடி கிராமத்தைச் சேர்ந்த சிவப்பிரகாசம் பயிரிடுகிறார். மிகப்பிரமாதமான ரகம் அது' என்றொரு தகவல் கேள்விப்பட்டுத்தான் அவரைத் தேடிச் சென்றோம். அப்போதுதான் இந்த பொங்கல் உபசரிப்பு! பேச்சைத் தொடர்ந்தார் சிவபிரகாசம், மற்ற ரக அரிசியில் சமைக்கிற சர்க்கரைப் பொங்கலுக்கும், கம்பஞ் சம்பாவில் செய்கிற சர்க்கரைப் பொங்கலுக்கும் நிறையவே வித்தியாசம் தெரியும். வெண் பொங்கலுக்கும் கூட இது பிரமாதமா இருக்கும். பிரியாணி செய்தா கூட ரொம்ப நல்லாவே இருக்கும்.

முப்பது வருடத்திற்கு முன், இந்தப் பகுதியில் கம்பஞ் சம்பா நெல் சாகுபடி பரவலா நடந்துச்சு, ஆனால், இப்ப யாருக்குமே இதைப் பற்றி தெரியவில்லை. 'இப்படி ஒரு ரகம் இருக்கா?னு ஆச்சர்யமா கேட்கிறாங்க. 'அரிய ரகம்'ங்கற பட்டியல்லயே சேர்ந்திடுச்சு.

பார்க்கிறதுக்கு சீரகச் சம்பா மாதிரியே சன்னமா இருக்கும். அதனால் சட்டுனு அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், சீரகச் சம்பா அரிசிக்கும், கம்பஞ் சம்பா அரிசிக்கும் ரொம்ப நுட்பமான வித்தியாசம் உண்டு. சீரகச் சம்பாவைவிட கொஞ்சம் கட்டையா இருக்கும். வெண் சாம்பல் நிறத்தில் இருக்கும். நெல்லோட நிறம், கதிர்விடும் போது செங்கருப்பு நிறத்திலேயும்... அறுவடை சமயத்தில் தேன் நிறத்திலையும் இருக்கும்.

விதைப்பிலிருந்து 120 நாள் வயது கொண்டது கம்பஞ் சம்பா. போன வருடம்தான் இதோட விதை நெல் எனக்கு கிடைத்தது. சிதம்பரத்தைச் சேர்ந்த சொக்கலிங்கம்ங்கற விவசாயி இரண்டு கிலோ விதை கொடுத்தார்.

இயற்கை முறை விவசாயம் மூலமா, ஒற்றை நாற்று நடவில் அரை ஏக்கருக்கு சாகுபடி செஞ்சேன். 660 கிலோ மகசூல் கிடைத்தது. விதைக்காக நான்கு கிலோ எடுத்து வைத்துக் கொண்டு, மீதியை அரிசியாக்கினேன். 300 கிலோ கிடைத்தது. அரவைக் கூலியை, தவிடு நேர் செஞ்சிடுச்சு. அரிசியாவே விற்றால் அதிக லாபம். கிலோ 60 ரூபாய்னு 18 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செஞ்சேன். எல்லாச் செலவும் போக 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் லாபம்.

அரிசி சன்னமா, வாசனையா, சுவையா இருந்ததனாலயும்.. உரம், பூச்சிமருந்து போடாமல் விளைவித்ததுனாலையும் நல்ல வரவேற்பு. விலையைப் பற்றி யாருமே கவலைப்படலை” என்றவர் சுமார் நான்கு அடி உயரத்தில், தளதளவென வளர்ந்து செழிப்பாகக் காட்சி அளித்த கம்பஞ் சம்பா நெற்பயிரைத் தடவிக் கொடுத்தபடியே பேசியவர், “போன வருடம், அரைக் ஏக்கர் கம்பஞ்சம்பா, அரை ஏக்கர் பொன்னி இது இரண்டுக்கும் சேர்த்து 8 டன் மக்கிய தொழுவுரத்தை அடியுரமா போட்டேன்.

இயற்கை இடுபொருள்களையும் கொடுத்தேன். இந்த வருடம் அடியுரமே போடாமல், இயற்கை இடுபொருள்களை மட்டுமே கொடுத்திருக்கேன். ஒரு ஏக்கர் முழுக்கவும் கம்பஞ் சமபாவையே சாகுபடி செஞ்சிருக்கேன். போன முறையை விட இந்த முறை கதிரோட நீளம் அதிகமா இருக்கு. பசுமையும் நல்லா கட்டியிருக்கு. ஒரு நாத்துக்கு 30 தூர் வரைக்கும் வெடிச்சிருக்கு. கண்டிப்பா ஏக்கருக்கு 25 மூட்டை (60 கிலோ மூட்டை) மகசூல் கிடைக்கும்னு உறுதியா நம்புகிறேன்’ என்று சொன்னார்.

பூச்சித் தாக்குதல், நோய்த் தாக்குதல் மற்றும் சாகுபடி முறை குறித்துக் கேட்டபோது “இதுக்கு மேல இவர்கிட்ட பேசிக்கீங்க.. இவர்தான் முழுநேரம் வயல்லயே கிடந்து கண்ணும் கருத்துமா பயிரைப் பார்த்துக்குறாரு” என தன் வயலில் வேலை பார்க்கும் விவசாயத் தொழிலாளியான வைத்தியநாதசாமியை மிகுந்த நேசிப்போடு, நம்மிடம் அறிமுகம் செய்து வைத்தார் சிவப்பிரகாசம்.

உற்சாகம் பொங்க ஆரம்பித்த வைத்தியநாத சாமி, கடந்த ஐந்து வருடமா இந்த நிலத்தில் ரசாயன உரமும் போடலை, பூச்சி மருந்தும் அடிக்கலை. முழுக்க இயற்கை விவசாயம்தான். ரசாயன முறையில் சாகுபடி செய்துக்கிட்டு இருந்தப்ப, ஏக்கருக்கு 30 மூட்டை மகசூல் கிடைத்தது. இயற்கைக்கு மாறின பிறகு வருடம், வெறும் 7 மூட்டைதான் கிடைத்தது. இரண்டாவது வருடம் 9, மூன்றாவது வருடம் 22 மூட்டைனு மகசூல் அதிகரிச்சுக்கிட்டே வருது. ஒரு வருடம் விட்டு, ஒரு

வருடம் தான் அடியுரமா, தொழுவுரம் போடுகிறோம்” என்று சொன்னவர், சாகுபடி முறை குறித்து விரிவாக எடுத்து வைத்தார்.

“எல்லா வகையான மண்ணிலுமே கம்பஞ் சம்பா நன்றாக விளைய வாய்ப்புள்ளது. பாரம்பரிய ரகமாக இருப்பதாலும், ரசாயன உரங்களைத் தவிர்ப்பதாலும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் ஏற்படுவதில்லை. ஒரு ஏக்கரில் ஒற்றை நாற்று நடவு முறையில் சாகுபடி செய்ய, அரை சென்ட் நிலத்தில் நாற்றங்கால் அமைக்க வேண்டும்.

மண்ணை நன்கு கொத்தி, மட்கிய தொழுவுரம் 50 கிலோ இட்டு, நான்கு கிலோ விதை தூவ வேண்டும். உடனே தண்ணீர் தெளிக்க வேண்டும். அதன் பிறகு, நான்கு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் தெளிக்க வேண்டும். 15-ம் நாள் 50 மில்லி இ.எம். திமியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நாற்றின் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும். 25-ம் நாள் நாற்று தயாராகி விடும். சாகுபடி நிலத்தில் முதலில் இரண்டு சால் உழவு ஓட்டி, 8 டன் மக்கிய தொழுவுரமிட்டு, மீண்டும் இரண்டு சால் உழவு ஓட்ட வேண்டும். (உழவுக்கு கனம் குறைந்த கை டிராக்டரைப் பயன்படுத்தினால், மண்ணின் தன்மை சிறப்பாக இருக்கும்.)அதன் பிறகு, முக்கால் அடி இடைவெளியில் ஒவ்வொரு நாற்றாக நடவு செய்ய வேண்டும். மண்ணின் தன்மைக்கு ஏற்ப, நான்கு நாட்களுக்கு ஒரு முறையோ.. வாரம் ஒரு முறையோ தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நடவிலிருந்து 15,30,45-ம் நாட்களில் ஒவ்வொரு முறையும் தலா 6 லிட்டர் மாட்டுச் சிறுநீர், 5 கிலோ சாணம், 10 லிட்டர் பழக்கரைசலோடு (பத்து கிலோ அழுகிய பழங்கள் மற்றும் ஒரு கிலோ நாட்டுச் சர்க்கரையைக் கலந்து 10 நாட்கள் வைத்திருந்தால், பழக்கரைசல் தயார்).. 50 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும். களைகள் இருந்தால் நடவிலிருந்து 20-ம் நாள் அதை காலால் அமுக்கி விட வேண்டும். நடவிலிருந்து 60-ம் நாள் கதிர் வரத் தொடங்கும். அடுத்த ஒரு மாதம் கழித்து, நன்கு கதிர் முற்றியதும் அறுவடை செய்யலாம்.

சாகுபடி குறிப்புகளை வைத்தியநாதசாமி சொல்லி முடிக்க மீண்டும் ஆரம்பித்த சிவப்பிரகாசம், “சுமார் 25 மூட்டை மகசூல் எதிர்பார்க்கிறேன். இந்தத் தடவையும் மதிப்புக் கூட்டித்தான் விற்கப் போகிறேன். அதாவது அரிசியாக்கி விற்பனை செய்யப் போகிறேன். ஒரு ஏக்கரில் விளைந்த நெல்லு மூலமா.. 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல லாபம் கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை” என சொன்னார்.

| ஒரு ஏக்கரில் ஒற்றை நாற்று நடவு முறையில் கம்பஞ் சம்பா சாகுபடி செய்ய செலவு – வரவு | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| வரப்பு வெட்ட | 800 | |
| கை டிராக்டரில் 4 சால உழவு | 2,600 | |
| 8 டன் தொழுவுரம் | 4,000 | |
| 4 கிலோ விதை | 200 | |
| நாற்று பறிப்பு மற்றும் நடவு | 3,000 | |
| இயற்கை இடுபொருட்கள் மற்றும் தெளிப்புக் கூலி | 630 | |
| அறுவடை மற்றும் கதிரடித்தல் | 2,500 | |
| பராமரிப்புக்கான ஆள் சம்பளம் | 3,000 | |
| மகசூல் 1,500 கிலோ நெல்லில் 675 கிலோ அரிசி கிலோ x 60 ரூபாய் வீதம் | | 40,500 |
| மொத்தம் | 16,730 | 40,500 |
| நிகரலாபம் | | 23,770 |

**தொடர்புக்கு:**

சிவப்பிரகாசம்,

அலைபேசி : 94432-91202